SEP 2011

**8201**

Register Number | | | | | |

## பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் *நான்கனுக்கு* மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4 × 2 = 8

1. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்களை எழுதுக.

2. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

3. திருவள்ளுவர் நடுங்க வரும் துன்பம் யாருக்கு இல்லை என்கிறார் ?

4. நாடெங்கும் புத்தக சாலை ஏன் வேண்டும் ?

5. வீரமாமுனிவரின் இலக்கியப் பங்களிப்பு எத்தகையது ?

6. கலம்பகம் - பெயர்க் காரணம் தருக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3 × 4 = 12

7. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும் என்று நாமக்கல் கவிஞர் கூறியுள்ளார் ?

8. கபிலர் பற்றிக் குறிப்பு எழுதுக.

9. வினைத்திட்பத்தின் சிறப்பும், அஃதுடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக.

10. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

11. கோலியாத்து மொழிந்த இகழ்ச்சியுரைகள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக: 3 × 4 = 12

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. மனித நேயம் பற்றிக் கவிஞர் கோ. மோகனரங்கன் கூறும் கருத்துகளுள் நான்கினைத் தெளிவுபடுத்துக.

15. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார் ?

16. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும், வேண்டாததும் யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. செய்ந்நன்றி அறிதல் பற்றி திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. கண்ணகியின் சூளுரையும் நகர மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ?

19. பாரதியார் காட்டும் அந்திவான வருணனையைத் தொகுத்து வரைக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. $4 \times 1 = 4$

20. "நல்லது செய்தல் ஆற்றீராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் !"

அ) இப்பகுதி இடம் பெற்றுள்ள நூல் எது ?

ஆ) இச்செய்யுளடிகளைப் பாடியவர் யார் ?

இ) இவ்வடிகள் யாருக்காகக் கூறப்பட்டது ?

ஈ) இவ்வடிகள் தெரிவிக்கும் செய்தி யாது ?

*அல்லது*

21. "திங்களொன் றிருப்பன் இன்னே; திருவுளம் தீர்ந்த பின்னை

மங்குவென் உயிரோ டென்றுன் மலரடி சென்னி வைத்தாள் !"

அ) இதனைக் கூறியவர் யார் ?

ஆ) யாரிடம் கூறினார் ?

இ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?

ஈ) மங்குவென் என்ற சொல் ஈண்டு உணர்த்தும் பொருள் யாது ?

VI. 22. "நண்ணு மிளமைப் பருவத்திலே முதல்" எனத் தொடங்கும் மொழிவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. $4 + 2 = 6$

23. "எந்நன்றி" எனத் தொடங்கும் குறட்பாவையும் "இலர்" என முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் *இரண்டு* சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) ஓம்புமின் ஆ) தோன்றி இ) பொறுத்தல்

ஈ) செய்க உ) விடுவார் ஊ) வந்தனன்.

[ Turn over

25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) அருந்துயர் ஆ) மலர்தலும் கூம்பலும்

இ) சுமை சுமையாய் ஈ) நல்லாற்றுப் படூஉம்

உ) கடிமகள் ஊ) வீங்குநீர்.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) கடுந்திறல் ஆ) பகலுறை இ) காற்சிலம்பு

ஈ) வளைத்தோளி உ) வண்டுறை ஊ) விண்ணிடி.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

பொருண்மொழிக் காஞ்சித்துறை ***அல்லது*** முல்லைத்திணை.

28. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை 1 × 4 = 4

இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

***அல்லது***

சொற்பொருட் பின்வருநிலையணி ***அல்லது*** எடுத்துக்காட்டு உவமை அணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 29. செறுவார் | — | அறிவுடைமை |
| 30. ஒட்பம் | — | செலுத்துவது |
| 31. உய்ப்பது | — | அறிவின்மை |
| 32. பேதைமை | — | பகைவர் |
| | — | இல்லாதவர். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : $16 \times 1 = 16$

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்

அ) நக்கீரர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

34. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்

அ) 11

ஆ) 65

இ) 70.

35. அகநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்

அ) அகப்பொருள்

ஆ) நெடுந்தொகை

இ) மணிமிடைப்பவளம்.

36. திருவள்ளுவர் வாழ்ந்த காலம்

அ) கி. மு. 18

ஆ) கி. பி. 31

இ) கி. மு. 31.

37. சிலப்பதிகார உரையாசிரியர்களுள் ஒருவர்

அ) இளம்பூரணர்

ஆ) அரும்பதவுரைக்காரர்

இ) நச்சினார்க்கினியர்.

38. சீதாப்பிராட்டி தன்னை மீட்டுச் செல்ல வேண்டி விதித்த காலம்

அ) ஒருநாள்

ஆ) ஒருதிங்கள்

இ) ஓராண்டு.

39. பதினெட்டு உறுப்புகள் அமையப் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ) கலம்பகம்

ஆ) பள்ளு

இ) உலா.

40. 'மருகி' என்பதன் பொருள்

அ) மகள்

ஆ) மருமகள்

இ) அம்மா.

41. முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை

அ) ஆசிரியப்பா

ஆ) வஞ்சிப்பா

இ) சிந்துப்பா.

42. 'திவ்வியகவி' என்ற பெயரால் அழைக்கப்படுபவர்

அ) ஒட்டக்கூத்தர்

ஆ) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

இ) குமரகுருபரர்.

43. உவமைக்கவிஞர் சுரதாவின் இயற்பெயர்

அ) இராமகோபாலன்

ஆ) இராசகோபாலன்

இ) நந்தகோபாலன்.

44. 'சின்னச் சீறா' என்ற நூலை இயற்றியவர்

அ) உமறுப்புலவர்

ஆ) குணங்குடி மஸ்தான்

இ) பனுஅகமது மரைக்காயர்.

45. 'தமிழகத்தின் வேர்ட்ஸ்வர்த்' எனப் பாராட்டப்பட்டவர்

அ) பாரதிதாசன்

ஆ) வாணிதாசன்

இ) கம்பதாசன்.

46. கம்பரை ஆதரித்த வள்ளல்

அ) பாரிவள்ளல்

ஆ) குமணவள்ளல்

இ) சடையப்பவள்ளல்.

47. 'பால்வீதி' என்ற நூலின் ஆசிரியர்

அ) தாராபாரதி

ஆ) சுப்பிரமணிய பாரதி

இ) அப்துல்ரகுமான்.

48. 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கப்பட்டவர்

அ) அப்பர்

ஆ) மாணிக்கவாசகர்

இ) சுந்தரர்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. எழுமை ................ உள்ளுவர் தங்கண்

விழுமம் ................ நட்பு.

50. மறவற்க ................ கேண்மை துறவற்க

துன்பத்துள் ................ நட்பு.

---